வகையில் மைய மாநில அரசுகள் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்னாள் படை வீரரும், சுதந்திரப் போராட்ட வீரரும், தேவேந்திரகுல வேளாளர்களின் தலைவருமான இமானுவேல் சேகரன் அவர்களுக்குத் தமிழகத்தின் தலைநகரமாம் சென்னையில் கே.கே. நகர் உதயம் திரையரங்கின் எதிரில் சிலை நிறுவி கௌரவிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசை வேண்டிக்கொள்கிறேன். அவர் பிறந்த நாளில் அரசு விழா எடுக்க வேண்டும். நினைவு தபால் தலை வெளியிட்டு மாநில அரசு கௌரவப்படுத்த வேண்டும். இமானுவேல் சேகரன் பிறந்த இராமநாதபுரம் மாவட்டத்திற்கு அவர் பெயரிலே அந்த மாவட்டத்தை இமானுவேல் சேகரன் மாவட்டம் என்று அழைக்கப்பட வேண்டும் என்று கோருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வீரபாண்டி கட்டபொம்மனுக்குத் துணையாக இருந்து வீரபாண்டியக் கட்டபொம்மனின் முதன்மை படைத் தளபதியாக விளங்கிய கட்டகருப்பன் சுந்தரலிங்கம் தேவேந்திரன் என்ற பெயரில் போக்குவரத்துக்கழகம் ஒன்றை ஏற்படுத்திட அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). தேவேந்திர குல வேளாளர் பெருமக்களின் உலகம் போற்றும் ...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கோபாலகிருஷ்ணன், உட்காருங்கள். ஒரு அறிவிப்புக் கொடுத்துவிடுகிறேன். பிறகு நீங்கள் பேசலாம்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தனித் தீர்மானத்தின் மீது ஓர் உறுப்பினர் பேசிய ஒரு பகுதி அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று காலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மீது கொண்டு வந்த ஒரு தீர்மானத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் பேசுகின்றபோது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப்பற்றிப் பாராட்டிப் பேசுகையில் இடையில் ** என்று சொல்லியிருக்கிறார்கள். ** என்ற அர்த்தத்திலே சொல்லியிருக்கிற காரணத்தினால் அந்த வார்த்தைகள் மட்டும் அவைக் குறிப்பிலிருந்து

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நீக்கப்படுகின்றன. ** என்று மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் இதிலே குறுக்கிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது இதிலே நான் சொன்ன அந்த வார்த்தைகள், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் சொன்னது உட்பட அனைத்தையும் நீக்க உத்தரவிடுகிறேன். பத்திரிகையாளர்கள் இதனை பிரசுரிக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசியது எல்லாவற்றையும் நீக்கிவிட்டீர்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை

2. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 30-பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எடுத்து வைக்கின்ற நேரத்தில் பிற்படுத்தப்பட்டவர்களுடைய சதவிகிதத்தை மிகக் குறைவாகச் சொன்னார்கள். இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில் அரசாங்கம் எடுத்திருக்கின்ற கணக்கெடுப்பின்படி ஆதிதிராவிடர் மக்கள் 19.2 சதவிகிதம் இருக்கிறார்கள். பழங்குடி மக்கள் 1 சதவிகிதம் இருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்டவர்கள் 67.8 சதவிகிதம் இருக்கிறார்கள். 3,78,44,436 பேர் இருக்கிறார்கள். இன்றைக்கு அதர் கம்யூனிட்டிஸ் 67,028 பேர். எனவே 67.8 சதவிகித மக்களுக்குத்தான் 50 சதவிகித இட ஒதுக்கீடு கொடுக்கப்பட்டிருக்கிறது. பழைய காலங்களில் முற்படுத்தப்பட்ட சமுதாயமே அதிகமாக இருந்தது. காலாகாலங்களில் அவர்கள் பல்வேறு அரசாங்கத்தினுடைய

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.